தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக .

(எ - கா)

"பொன்பூச் சொரியும் என்ற பாடலைப் பாடியவர்"
சின்னத்தம்பிப்புலவர் .
( சின்னத்தம்பிப்புலவர், பாரதியார், சோமசுந்தரப்புலவர் )

1. ____________________ ஒளியில் இருக்கும் ஏழு நிறங்களே வானவில்லாகத் தோன்றும்.
( நிலாவின், கதிரவனின், விண்மீனின் )

2. 17 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________.
( பதினேலு, பதினேளு, பதினேழு )

3. ____________________ புறாவைக் காப்பாற்றியது.
( எறும்பு, பாம்பு, காகம் )

4. நான் பள்ளிக்குச் செல்லும் வீதி ____________________ க் காணப்படுகின்றது.
( இன்பதுன்பமாக, மேடும்பள்ளமுமாக, இனிமையாக )

5. வானொலியைக் கண்டுபிடித்தவர் ____________________ .
( தோமசு அல்வா எடிசன், மார்க்கோனி, கலிலியோ )

6. தமிழ் + கல்வி ____________

( தமிழ்கல்வி, தமிழ்க்கல்வி, தமிழ்ப்கல்வி )

7. அதியர்மான் பறித்த கனி ____________ .

( மாங்கனி, பலாக்கனி, நெல்லிக்கனி )

8. அவள் எனது நண்பி. ____________ எனது நண்பிகள்.

( அவர்கள், அவன், அவை )

9. **ஒலிவட்டு:**

ஔவையார் ____________ வாழ்ந்தார்.

( ஈழத்தில், தமிழ்நாட்டில், சிங்கப்பூரில் )

10. மீன் நீந்தும். அது போல குரங்கு ____________ .

( தாவும், தத்தும், ஊரும் )

11. கடல்வழியாகச் செல்லும் உந்து ____________ .

( விண்ணுந்து, சிற்றுந்து, நீருந்து )

12. மாதவி மருந்து வாங்க ____________ ச் சென்றாள்.

( அங்காடிக்கு, மருந்தகத்துக்கு, வைப்பகத்துக்கு )

13. சாய்ந்த கோபுரம் அமைந்துள்ள நாடு ____________ .

( அமெரிக்கா, இந்தியா, இத்தாலி )

14. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ________________.

( புலி, புறா, குதிரை )

15. காற்று ________________ .

( வீசும், பெய்யும், ஓடும் )

16. நாய் வாசலில் இருந்து ________________.

( கரைகின்றது, குரைக்கின்றது, கூவுகின்றது )

17. வன்னியை ஆண்ட பெருவீரன் ________________.

( பண்டாரவன்னியன், சங்கிலியன், பாரி )

18. அடி என்பதன் எதிர்ச்சொல் ________________.

( வலம், நுனி, இகழ் )

19. ஓர் ஆண்டில் ________________ மாதங்கள் உள்ளன?

( எத்தனை, எங்கே, ஏன் )

20. பாவலன் ________________ மதித்து நடப்பான்.

( பெரியவர்கள், பெரியவர்களுக்கு, பெரியவர்களை )

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| கணீர்கணீர் | மலரும் | ~~சுற்றும்முற்றும்~~ |
| பிடிக்க | பறக்கிறது | மகிழ்ச்சியாக |

(எ - கா)

கயல்விழி காணமற்போன தன் நாய்க்குட்டியைச் சுற்றும்முற்றும் தேடினாள்.

1. மல்லிகைப்பூ மாலை நேரத்தில் ________________ .

2. மீனவர் மீன் ________________ க் கடலுக்குச் சென்றனர்.

3. கோவில்மணி ________________ என்று ஒலித்தது.

4. தாயகத்து உறவுகளைக் காணும் போது ________________ இருக்கும்.

5. தேசியக்கொடி உயரமான கம்பத்தில் ________________ .

புள்ளிகள் 10

3) மிகப்பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.

( எ - கா )

ஓதாமல் ஒருநாளும் இருக்க ____வேண்டாம்____.

1. நாங்கள் ஒலிவட்டிலுள்ள பாடலைக் கேட்க ________________ .

2. அக்காவினால் சட்டை ________________ .

3. மான்கள் குளத்தில் தண்ணீர் ________________ .

4. நேற்று நான் நண்பர்களுடன் விலங்ககம் ________________ .

5. கோழி குஞ்சுகளுடன் வாழ்ந்து ________________ .

புள்ளிகள் 10

## 4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதுக.

(எ - கா)

__நுண்ணுயிரிகள்__ நோயை உருவாக்கும்.

( நுண்ணுயிரிகள், நுன்னுயிரிகள் )

1. நாவரசன் ஏற்றிய பட்டம் ____________________ பறந்தது.

   ( வானத்தில், வாணத்தில் )

2. நூலகம் செல்லும் ____________________ நண்பியைக் கண்டேன்.

   ( வளியில், வழியில் )

3. கற்றவர்களுடன் சேர்ந்தால் நல்ல ____________________ப் பெறலாம்.

   ( அறிவை, அரிவை )

4. ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து ____________________ இருக்கும்.

   ( நீழமாக, நீளமாக )

5. நாம் சத்துள்ள ____________________ உண்போம்.

   ( உணவை, உனவை )

புள்ளிகள் 05

5) **கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| நா | ன் | கு | பா | ல் |
| கா | ர் | த் | தி | கை |
| மா | ங் | கா | ய் | க |
| அ | ஞ் | ச | ல் | தை |

(எ - கா)

பருவகாலங்கள் நான்கு .

1. பாட்டி கூறுவது ________________ .

2. ஆவில் இருந்து பெறப்படுவது ________________ .

3. மாவீரர் நாள் கொண்டாடப்படும் மாதம் ________________ .

4. புளிப்புச் சுவை உடையது ________________ .

5. நாம் பிறருக்கு எழுதி அனுப்புவது ________________ .

புள்ளிகள்10

6) **மிகப்பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| ~~சனி~~ | ஆசிரியர் | ஆண்டுவிழா |
| மூன்றாம் | விருப்பம் | தமிழில் |

(எ - கா)

எனது பெயர் காவியா. நான் ஒவ்வொரு <u>சனி</u> க் கிழமையும் தமிழ்ப்பள்ளிக்குச் செல்வேன். நான் ________ வகுப்புப் படிக்கின்றேன். எனது ________ என்னுடன் அன்பாகப் பழகுவார். எனக்குத் தமிழ் என்றால் நல்ல ________ . நான் அம்மா, அப்பாவுடன் ________ பேசுவேன். வருகின்ற மாதம் எனது பள்ளியில் ________ நடைபெறும். நான் ஆண்டுவிழாவில் நடனம் ஆடுவேன்.

புள்ளிகள் 10

## 7) ஒரு சொல்லில் விடை எழுதுக.

(எ - கா)

பாரிசில் அருங்காட்சியகம் அமைந்துள்ள இடம் எது?

லூவர் ________________________________

1. அதியமான் ஏன் காட்டுக்குச் சென்றான்?

________________________________

2. வெற்றிவளைவைக் கட்டியவன் யார்?

________________________________

3. அறநூல்களில் ஒன்றைத் தருக.

________________________________

4. ஆழிக்குமரன் என்று அழைக்கப்பட்டவர் யார்?

________________________________

5. இசையோடு பாடி, ஆடி நடிப்பதை எவ்வாறு அழைப்பர்?

________________________________

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஓர் ஆடு இரண்டு குட்டிகளுடன் வாழ்ந்து வந்தது. ஒவ்வொரு நாளும் ஆடும் குட்டிகளும் புல் மேயத் தோட்டத்திற்குச் செல்லும். ஓர் ஆட்டுக்குட்டி மட்டும் தாயின் சொல்லைக் கேட்பதில்லை. அது எப்பொழுதும் தாயை விட்டுப் பிரிந்தே நிற்கும். அந்த ஆட்டுக்குட்டியை ஓர் ஓநாய் கண்டது. அது ஆட்டுக் குட்டியைப் பிடிக்கப் பாய்ந்தது. ஆட்டுக்குட்டி அச்சத்தினால் கத்தியது. உடனே தாய் ஆடு ஓடி வந்து ஓநாயைக் கொம்பினால் குத்தித் துரத்தியது. ஆட்டுக்குட்டியும் தனது தவறை உணர்ந்து கொண்டது.

(எ - கா)

ஆடு எத்தனை குட்டிகளுடன் வாழ்ந்து வந்தது?

<u>ஆடு இரண்டு குட்டிகளுடன் வாழ்ந்து வந்தது</u>__________ .

1. ஆடும் குட்டிகளும் புல் மேய எங்கே செல்லும்?

________________________________________

________________________________________ .

2. ஓர் ஆட்டுக்குட்டி மட்டும் யாரின் சொல்லைக் கேட்பதில்லை?

________________________________________

________________________________________ .

3. ஆட்டுக்குட்டியை எது கண்டது?

________________________________________ .

4. எது அச்சத்தினால் கத்தியது?

________________________________________ .

5. தாய் ஆடு ஓடி வந்து ஓநாயை எதனால் குத்தித் துரத்தியது?

________________________________________ .

புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ________________________________________

2. ________________________________________

3. ________________________________________

4. ________________________________________

5. ________________________________________

புள்ளிகள் 15